செ. கு. எண்: 128 நாள் : 05.11.2015

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 5.11.2015

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், சிக்கணாங்குப்பம் மஜ்ரா, திருவாபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெருமாள் என்பவரின் மகன் வடிவேல் 2.8.2015 அன்று தனது வீட்டில் மின்கம்பி பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் மயக்கமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், நந்தம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏழுமலை என்பவரின் மகன் திரு. அரிகரன் 14.9.2015 அன்று தனது வீட்டினருகே மேல்நிலை மின் கம்பி மீது உரசி நின்று கொண்டிந்த தானியங்கி மண் அள்ளும் இயந்திரத்தை (JCB Machine) தொட்டதால் மின்சாரம் தாக்கியதில் மயக்கமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

2.10.2015 அன்று வானராங்குடி கிராமத்தில் அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்தால் மின்சாரம் தாக்கி தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், திருச்சிடவளந்தை உட்கிராமத்தைச் சேர்ந்த திரு. தியாகராஜன் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியையும்; அவரது மனைவி திருமதி நீலாவதி 3.10.2015 அன்று மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், மேல்கரியமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த சேர்ந்த திரு. மாணிக்கம் என்பவரின் மகன் பரமசிவம் 2.10.2015 அன்று வயல்வெளியில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்

வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், மோட்டூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மணிகண்டன் என்பவர் 7.10.2015 அன்று வயல்வெளியில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**